# *பரிசுத்த தந்தைபாப்பரசர்*

பரிசுத்ததந்தை பாப்பரசர் பிரானஸிஸ் இவ்வாண்டு பெரிய வியாழன் அன்று பன்னிரு அப்போஸ்தலர்களின் கால்களைக் கழுவும் நோக்கத்துடன் ரோம் நகரில் உள்ள சிறைச்சாலை ஒன்றிற்கு திருவழிபாட்டினை நடத்தச் சென்றார். சிறையிலிருந்த கைதிகளில் பன்னிரு கைதிகளின் கால்களைக் கழுவிமுத்தமிட்டார். இக்கைதிகளில் பெண் கைதியும் அடங்குவார். இக் கைதிகளில் இரண்டு பேர் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்கள். கைதிகளில் ஒருவர் முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவர். இதனால் வத்திக்கான் நகருக்குள்ளேயே பாப்பரசருக்கு எதிர்ப்பு உண்டாகியுள்ளது. எவ்வாறு முஸ்லிம் ஒருவரின் காலை இவர் முத்தமிடலாம்?, என்று ஒருசிலர் கேட்கின்றனர். மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஐரோப்பிய கண்டத்துக்குள் மில்லியன் கணக்காக வரும் அகதிகளையும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இரு கரம் நீட்டி வரவேற்க வேண்டும் என்று பாப்பரசர் கூறுவது சரியல்ல என்று ஒரு சிலநாடுகளின் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் உலகில் இன்று முக்கியமனிதர் யார் என்று ஆண்டுதோறும் **Time** பத்திரிகையால் நடத்தப் படும் ஆய்வு ஆரம்பமாகியுள்ளது. இன்று உலகில் பலதலைவர்கள் அரசியல் ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளனர். அமெரிக்க அதிபர் **Trump,** துருக்கிநாட்டு அதிபர் **Erdogan,** இரஸ்ய நாட்டு அதிபர் **Poutine,** சீன அதிபர் **Xi Jinping,** பிரான்ஸ் நாட்டு அதிபர் **Macron** ஆகியோரின் மத்தியில் இன்று மக்களுக்கு வழிகாட்டும் விண்மீனாகத் திகழ்பவர் திருத்தந்தை பாப்பரசர் பிரான்ஸிஸ் அவர்களே என்று பிரான்சஸ் நாட்டில் மக்கள் மத்தியில் எடுக்கப் பட்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

இவர் பாப்பரசராகப் பொறுப்பேற்ற இந்த ஐந்து ஆண்டுகளில, இது வரை மொத்தம் உலகின் தொண்ணூறு (90) நாடுகளின் அதிபர்கள் இவரைச் சந்தித்து உரையாற்றுவதற்காக, வத்திக்கான் நகருக்கு வந்திருக்கின்றனர். ஜெர்மன் நாட்டு அதிபர் **Angela Merkel** போன்றவர்கள் பலமுறை பாப்பரசரைக் கலந்தாலோசிப்பதற்காக இத்தாலி வந்துள்ளனர். ஆங்கிலேய நாட்டு மகாராணி இரண்டாம் எலிசபெத் தன் வாழ்விலேயே முதல் முறையாக பாப்பரசரைச் சந்தித்து உரையாடுவதற்காக, ரோம் நகர் வந்தார். அமெரிக்க அதிபர் **Trump** தன் மனைவியுடன் இவரைச் சந்தித்து வெளியேறும் தருணத்தில் பாப்பரசரிடம் நீங்கள் என்னிடம் சொன்ன அந்தகடைசி வாக்கியத்தை நான் என்றும் என் மனதில் வைத்திருப்பேன் என்று இறுதியாகக் கூறிச் சென்றார். எனவே பாப்பாரசர் பிரான்ஸிஸ் இன்று உலகின் மனச்சாட்சியாக மாறிவருகின்றார் எனவும், இவருக்கு நிகராக பிறருக்கு முன்னால் நின்று உண்மையை எடுத்துக் கூறத் தகுதி பெற்றவர்கள் இவ்வுலகில் வேறு எவரும் இல்லை என்றும் கதைக்கப் படுகிறது.

எளிமையானவாழ்க்கை, பிரிந்த சகோதரர்களுடன் உறவு, முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை, இறைவனை நம்பாதவர்களுடன் **(atheists)** விஞ்ஞானரீதியில் உரையாடல், ஏழை எளிய மக்களுக்காகப் பரிந்துரை, இயற்கையினைக் கட்டிக் காக்க எமக்குள்ள கடமையைப் பற்றிய அப்போஸ்தலிக்க மடல், இறைவனின் அளப்பற்ற கருணையை இவர் பிரதிபலிக்கும் முறை, (நரகம் என்று ஒன்றிருப்பதை இவர் நம்புவதில்லை என்று கூட பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளது), திருச்சபையினைச் சீர்படுத்த இவர் ஏறெடுக்கும் முயற்சிகள் என்று இவரின் செயல்களை நாங்கள் வரிசையாகச் சொல்ல ஆரம்பித்தால் 83 வயதில், எங்கிருந்து இவருக்கு இவ்வளவு சக்திகிடைக்கின்றது என்ற கேள்வி தான் எல்லோரின் மனத்திலும் எழும்பும்.

**Time** பத்திரிகையாளர்கள் யாரை இவ்வாண்டு உலகின் முக்கியமனிதராகத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதை நாங்கள் காத்திருந்து தான் பார்க்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் பிரிதிநிதியாகவும், கத்தோலிக்கத்தின் தலைவராகவும் சிறந்த ஒரு குருவினை எமக்களித்த இறைவனுக்கு நாங்கள் நன்றியுணர்ச்சியோடு வாழ்த்தினைத் தெரிவிக்க இந்த ஆய்வு எங்களுக்கு ஒருவாய்ப்பாக அமைகின்றது. பாப்பரசரின் முக்கிய கருத்துகளுக்காக எம் செபங்களை ஏறெடுக்க மறவாதிருப்போம்.

கிறிஸ்துவில் அன்புடன்,